**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 107/2023 |
| Deposition of Witness | : | PW-5 |
| Name | : | கோபாலகிருஷ்ணன் |
| Father Name | : | பழனிச்சாமி |
| Village | : | திருச்சி |
| Taluk | : | திருச்சி |
| Age | : | 24 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.09.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சியில் குடியிருந்து வருகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக நான் கொடுவாயில் உள்ள சூர்யா பேக்கரி டீ கடையில் டீ மாஸ்டராக வேலை செய்து வந்தேன். ஒரு நாள் மதியம் 2.00 மணியளவில் போலீசார் மெடிக்கலுக்கு வந்தார்கள். நான் கடையில் இருக்கும்போது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் கிருஷ்ணன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் டீ கடையில் டீ மாஸ்டராக வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான். எனது கடையில் வந்து போலீசார் கையொப்பம் வாங்கி

சென்றார்கள். என்னுடன் யாரும் கையொப்பம் செய்யவில்லை. நான் எதற்காக கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் ஆண் போலீசார் கையொப்பம் பெற்றுச்சென்றார் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.09.09 19:25:24 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்